# நாடாளுமன்ற அமர்வுகள் செப்டம்பர் 24 வரை

உடனுதவும்
31-8-1991

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 15 இதழ்: 201
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 31-8-1991

## ஒத்திவைப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற அமர்வுகளை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா எதிர்வரும் செப்டம்பர் மாதம் 24ம் திகதிவரை ஒத்திவைத்திருக்கிறார். நாடாளுமன்றத்தின் வழமையான கூட்டம் எதிர்வரும் 3ம் திகதி செவ்வாய்க்கிழமை கூடவிருந்

(3ம் பக்கம் பார்க்க)

## பிரேமதாசா கொழும்பில் இல்லை

[கொழும்பு]

ஜனாதிபதி பிரேமதாசா தற்போது கொழும்பில் இல்லையென்றும் அவர் கொழும்பிற்கு வெளியே இருப்பதாகவும் நேற்றிரவு பி. பி.ஸி. தெரிவித்

[4-ம் பக்கம் பார்க்க]

## கிட்டு ஜெனிவாவில்?

[லண்டன்]

விடுதலைப்புலிகள் சர்வதேச பொறுப்பாளர் திரு. கிட்டு [சதாசிவம் கிருஷ்ணகுமார்] லண்டனை விட்டு வெளியேறி விட்டபோதிலும் அவர் தற்போது எங்கிருக்கிறார் என்பது குறித்த உறுதியான தகவலெதுவும் இதுவரை இல்லை.

திரு. கிட்டு பிரான்ஸ் சென்று அங்கிருந்து அவர் ஜெனிவா சென்றதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் திரு. கிட்டு ஐரோப்பிய நாடுகளில் தங்குவதை விடுத்துத் தமது சொந்தப்

(4-ம் பக்கம் பார்க்க)

## பதவிநீக்கப் பிரேரணை வெற்றிபெறும்

# ஜனாதிபதி ஆட்சி நீக்கப்பட்டு நாடாளுமன்றமுறை உருவாகும்

## பத்திரிகையாளர்களிடம் லலித் தகவல்

[கொழும்பு]

ஜனாதிபதி ஆட்சி முறை நீக்கப்பட்டு நாடாளுமன்ற [வெஸ்ட் மினிஸ்டர்] ஆட்சி முறை இந்த நாட்டில் அறிமுகப்படுத்தப்படும். ஜனாதிபதிக்கு எதிரான பதவி நீக்கப் பிரேரணை நிச்சயம் வெற்றி பெறும். ஜனாதிபதி பிரேமதாஸா பதவி இழப்பது உறுதி.

ராஜினாமா செய்த கல்வி உயர்கல்வி அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி நேற்று பத்திரிகையாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி மாநாட்டில் அவர் மேலும்தெரிவித்ததாவது: அரசாங்கம் நாடாளுமன்றததில்

(3ம் பக்கம் பார்க்க)

## பிரேரணையில் கையொப்பமிடாத எம்.பிக்களும் பிரேமாவுக்கு எதிராக செயல்படுவர்?

[கொழும்பு]

ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிராக சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையில் கையொப்பமிடாத ஐ. தே. க. உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிராகச் செயற்பட உறுதி பூண்டிருப்பதாகச்செய்

(4ம் பக்கம் பார்க்க)

## 9 அமைச்சர்கள் ராஜினாமா பிரேமா திரிசங்கு நிலையில்!

[கொழும்பு]

ஜனாதிபதி பிரேமதாஸா பதவி இழக்கக் கூடியதொரு சூழ்நிலை உருவாகி வருவதாக அவதானிகள் சிலர் கொழும்பில் தெரிவித்துள்ளனர்.

திரு. பிரேமதாஸாவுக்கு முதலில் ஏகமனதாக ஆதரவு தெரிவித்த அமைச்சரவையில் இருந்து பின் 9 அமைச்சர்கள் ராஜினாமாச் செய்துள்ளனர். மேலும் ராஜினாமாக்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் பாராளுமன்றில் வாக்கெடுப்பொன்று நடைபெறும் பட்சத்தில் ஜனாதிபதிக்கு எதிராக மூன்றில இரண்டு பெரும்பான்மை கிடைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் அந்த அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

[3-ம் பக்கம் பார்க்க]

## சுதந்திரத்தின் பலாபலன்கள் கிடைக்கவில்லை காமினி பேட்டி

[லண்டன்]

நாம் கஷ்டப்பட்டு பெற்ற சுதந்திரத்தின் பலாபலன்கள் ஜனாதிபதி ஆட்சிமுறையின் கீழ் எமக்குக் கிடைக்காமல் போய்விடுகிறது.

முன்னாள் அமைச்சர் திரு. காமினி திஸாநாயக்கா பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

[4-ம் பக்கம் பார்க்க]

## குற்றச்சாட்டு மனுவின் மூலகர்த்தா காமினி?

[கொழும்பு]

ஜனாதிபதி திரு. பிரேமதாஸாவுக்கு எதிரான குற்றச்சாட்டு மனுவின் பின்னணியில் முன்னாள் அமைச்சர் திரு காமினி திஸநாயக்கா முக்கியமாகச் செயற்பட்டதாக 'இந்து' பத்திரிகை தெரிவித்துள்ளது.

திரு. காமினி திஸநாயக்கா முன்னாள் அதிபர் திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் மிக நெருங்கிய சகாவாகச் செயற்பட்டவர் என்றும் 'இந்து' குறிப்பிட்டுள்ளது

இந்த எதிர்ப்பு மனு வெற்றி பெற்றாலும் சரி தோல்வியுற்றாலும் சரி அது பிரேமதாஸா

(3-ம் பக்கம் பார்க்க)

## 20 குற்றச்சாட்டுகள்

[கொழும்பு]

ஜனாதிபதி திரு. பிரேமதாஸா மீது 20 குற்றச்சாட்டுகளை சுமத்தியே அவரை பதவி விலகுமாறு 125 எம். பிக்களும் சபாநாயகருக்கு மனு ஒன்றை சமர்ப்பித்துள்ளனராம்.

இந்த 20 குற்றச்சாட்டுகளையும் அவர்கள் இந்த மனுவில் விரிவாக குறிப்பிட்டுள்ளார்களாம்

அதிகார துஷ்பிரயோகம், தேசத்துரோகம, லஞ்சம், கொலைமுயற்சி, தொலைபேசி ஒட்டுக்கேட்டல் போன்றவை முக்கியமானவையாகும்.

## மண்டைதீவு கடலிலிருந்து ஷெல் வீச்சு பொதுமக்கள் காயம்; வீடுகள் சேதம்!

[யாழ்ப்பாணம்]

மண்டைதீவுக் கடல்பிராந்தியத்திலிருந்து கடற்படையினரால் நடாத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் மண்டைதீவில் பல வீடுகள் சேதமடைந்தது டன் சில பொதுமக்களும் காயமடைந்துள்ளனர்:

நேற்றுக்காலை 6-30 மணியளவில் மண்டைதீவுக்கு அப்பாலுள்ள வெளிச்சவீட்டுக்கு அண்மையில் தரித்து நின்ற மூன்று பாரிய கடற்படைக் கப்பல்களிலிருந்து திடீரென மண்டைதீவில் பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி பத்துக்கும் மேற்பட்ட ஷெல்கள் அடுத்தடுத்து ஏவப்பட்டன. இதனால் பல வீடுகள் சேதமடைந்தது துடன் சில பொதுமக்களுக்கும் காயமேற்பட்டது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த

[3-ம் பக்கம் பார்க்க]

## தனிமனிதனுக்கு எதிரான போரல்ல

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானம் தனிமனிதனுக்கு எதிரான போரல்ல என ஸ்ரீ ல. சு. கட்சி தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

## பெருமளவுகொலைகளை தடுக்க எடுக்கப்பட்ட முடிவு இது!

[கொழும்பு]

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையில் நேற்றுக்காலை ஏழுஎதிர்க்கட்சிகள் பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தியுள்ளனர்.

திரு. பிரேமதாஸாவிற்கு எதிராக தாங்கள் ஏன் இந்த மனுவை சமர்ப்பித்தார்கள் என கூறுகையில்; ஜனநாயக அழிவை தடுக்கவும், பெருமளவு கொலைகளின் மூலம் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறலை தடுக்கவும்

[4ம் பக்கம் பார்க்க]

## அடுத்த நடவடிக்கைகுறித்து சுதந்திரக் கட்சி ஆராய்வு!

[கொழும்பு]

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுக்காலை திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் கூடி அடுத்த நடவடிக்கை குறித்து ஆராய்ந்தனர்.

இக் கூட்டத்தில் கட்சியின் பெருமளவு பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

(இ)

## அரசாங்க சேவையிலும் மாகாண அரசாங்க சேவையிலும் எழுதுனர் தரங்களுக்கு அமைய அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கான

# போட்டிப் பரீட்சை - 1991

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள திணைக்களங்களில் எழுதுனர் தரங்களில் உள்ள வெற்றிடங்களுக்கு அமைய அடிப்படையில் நியமனம் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்/ஆணையாளரால் நடாத்தப்படும் எழுத்து மூலமான பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரர்களிடம் இருந்து திறமை அடிப்படையிலும். இன விகிதாசாரப் பிரகாரமும் பொருத்தமானவர்கள் அரசாங்க சேவையிலும், மாகாண சேவையிலும் உள்ள பதவிகளுக்கு, அமைய அடிப்படையில் நியமனம் செய்வதற்குதெரிவு செய்யப்படுவர். இப்பரீட்சை யாழ். மாவட்டத்தில் மாத்திரம் நடைபெறும் இப்பரீட்சைப் பெறுபேறுகளின்படி எல்லா வெற்றிடங்களையுமோ அல்லது எவற்றையேனும் நிரப்பாது விடும் அதிகாரம் யாழ் மாவட்ட அரசாங்க அதிபருக்குண்டு. இந்நியமனங்கள் நிரந்தரமாக்கப்படமாட்டா. நிரந்தர நியமனம் பெற விரும்புவோர் அகில இலங்கை ரீதியில் நடைபெறும் போட்டிப் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைய வேண்டும்.

3. யாழ்ப்பாண மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் மாத்திரமே இப்போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம். பின்வரும் ஆவணங்கள் மூலம் விண்ணப்பதாரர் யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் என்று கருதப்படுவர்.

(1) விண்ணப்பதாரரின் பிறப்பு சான்றிதழ் படி அவர் யாழ் மாவட்டத்தில் பிறந்தவரென்று குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

அல்லது

(2) தேர்தல் இடாப்பில் அவருடைய பெயர் இருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் க. பொ. த. (சாதாரணம்)அல்லது தே. பொ. க. சா பரீட்சைக்கு யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலையில் கல்வி பயின்று சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்தைப் போல் தயாரித்து விண்ணப்பிக்கவேண்டும்.

4. தகமைகள்

எண்கணிதம்/கணிதம்/வர்த்தக எண்கணிதம், மொழி/இலக்கியம் ஆகியவற்றில் திறமைச் சித்திகளையும் உள்ளடக்கி 4 திறமைச் சித்திகளுடன் அல்லது 4B தரச்சித்திகளுடன் 6 பாடங்களில் கல்வி பொதுத் தராதர (சாதாரணப்) பரீட்சை/தேசிய பொதுக்கல்வி சான்றிதழ்ப் பரீட்சையில் சித்தி [மேலே குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் 4 திறமைச் சித்திகளுடன் அல்லது 4B தரச் சித்திகளுடன் ஒரே தடவையில் 5க்கு குறையாத பாடங்களில் சித்தியடைந்த பின் இரண்டாம் தடவையில் 6ம் பாடத்தில் சித்தியடைந்து பரீட்சையைப் பூர்த்தி செய்தவர்களும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர்களாவர்].

விண்ணப்பதாரிகள் இலங்கை பிரஜைகளாய் இருத்தல் வேண்டும்; விண்ணப்பதாரிகள் நல்ல தேகாரோக்கியமும் நற்குணமும் உடையவராய் இருத்தல் வேண்டும்.

வயது: விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

5. பரீட்சைத் திட்டம்

அபேட்சகர்கள் பரீட்சையில் இரண்டு வினாப்பத்திரங்களுக்கு தோற்றுமாறு வேண்டப்படுகின்றனர்;

[1] மொழித் தேர்ச்சி [ஒன்றரை மணித்தியாலம்] பல்விருப்பு தேர்வுப் புறப் பொருள்சார் வகை வினாத்தாள் ஒன்று. இது தொடர்புடைய மொழித் தேர்ச்சியை பரீட்சிப்பதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.

[11] உளச்சார்புச் சோதனை (ஒன்றரை மணித்தியாலம்) பல்விருப்புத் தேர்வுப் புறப்பொருள்சார் வகை வினாத்தாள். இது கணித உளச்சார்புகளையும் பொது விவேகத்தையும், பரீட்சிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட பொது வினாத்தாள் ஆகும்

இப்பரீட்சை மூன்று மொழி மூலங்களிலும் நடாத்தப்படும் [தமிழ்/ ஆங்கிலம்/சிங்களம்]

6. பர்ட்சைக் கட்டணங்கள்

விண்ணப்பதாரர் பரீட்சைக் கட்டணமாக யாழ். அரசாங்க அதிபரென ரூபா 100/-க்கான காசுக்கட்டளையை அல்லது யாழ் செயலகத்திலோ அல்லது யாழ் செயலகத்தினால் குறிக்கப்பட்ட வங்கியொன்றிலோ பணமாகக் கட்டிய பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். இப்பணம் எக்காரணம்கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.

7. சம்பளத்திட்டம்:

வேலை செய்யும் நாளுக்கு ரூபா 55/20 என்ற விகிதத்தில் வேதனமும் அரசாங்கத்தால அனுமதிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்.

8. விண்ணப்பத்தைக் கொண்டுள்ள கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "அரசாங்க சேவையிலும் மாகாண அரசாங்க சேவையிலும் எழுதுனர் தரங்களுக்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பம்" என்பதைக் குறிப்பிடவும்.

அபேட்சகர்கள் பரீட்சை மண்டபத்தில் தங்களுடைய அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர்:

பூரண விபரங்களைக் கொண்டிராத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

விண்ணப்பத்திலுள்ள அபேட்சகரின் ஒப்பம் பின்வருவோர்களில் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, நொத்தாரிசு, படைத்தாங்கு சேவைகளின் ஆணைபெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் பிரிவில் அரசாங்க வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்ட அதிகாரி, ஆண்டொன்றுக்கு 24,000/- ரூபாவிற்குக் குறையாத திரட்டிய சம்பளம் பெறுபவரும் அரச சேவையில் நிரந்தர பதவி வகிப்பவருமானவொருவர்:

9. விண்ணப்பம் பின்வரும் முகவரிக்கு 1991 செப்ரம்பர் 30ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்க அதிபர் / மாவட்ட ஆணையாளர்,
கச்சேரி,
யாழ்ப்பாணம்;

பரீட்சைத் திகதி பின்னர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும். அரசாங்க அதிபரின் பெயருக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10. இந்த அறிவித்தலில் கொடுக்கப்படாத எந்த விடயமும் நியமிப்பு அதிகாரியினால் நிர்ணயிக்கப்படும்.

கா. மாணிக்கவாசகர்
யாழ். அரசாங்க அதிபரும்,
மாவட்ட ஆணையாளரும்.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

அரசாங்க சேவையிலும், மாகாண அரசாங்க சேவையிலும் எழுதுநர் தரங்களுக்கு அமைய அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கான

### போட்டிப் பரீட்சை - 1991

1. (1) முழுப்பெயர்:-
(11) முதலெழுத்துக்களுடன் பெயர்:-
(திரு/திருமதி/செல்வி)
2. நிரந்தர முகவரி:-
3. பால்:- (ஆண்/பெண்)
4. நீர் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மொழி;-
(தமிழ்/ஆங்கிலம்/சிங்களம)
5. இனம்;-
(இலங்கைத் தமிழர்/சிங்களவர்/முஸ்லிம்கள்/இந்தியத் தமிழர்/பறங்கியர்/மலாயர்/பிறர்)
6. தேசிய அடையாள அட்டை இலக்கம்:-
7. (அ) பிறந்த திகதி:-
வருடம்: மாதம்: திகதி:
(ஆ) விண்ணப்பம் அனுப்பவேண்டிய முடிவுத் திகதியன்று (30-9-1991)
உமது வயது-
வருடம்- மாதம்- நாள்-
8. கல்வித் தகமைகள்:
(அ) க. பொ. த (சாதாரணம்) / தே. பொ. க. சான்றிதழ் பரீட்சை

| பரீட்சையின் பெயர் மாதம், வருடம். | பரீட்சை நிலையம் | பாடம் | தரம் | சுட்டிலக்கம் |
|---|---|---|---|---|
| (1) | | 1.<br>2.<br>3.<br>4.<br>5.<br>6.<br>7.<br>8. | | |
| (2) | | | | |

(ஆ) க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையின் விபரம்:—

| பரீட்சையின் பெயர் மாதம் வருடம். | பாடம், | தரம், | சுட்டிலக்கம், |
|---|---|---|---|
| | 1.<br>2.<br>3.<br>4. | | |

09. பிறந்த இடமும், மாவட்டமும்:—
10. ஆரம்பக் கல்வி தொடக்கம் க. பொ. த. (சாதாரண), தே. பொ. க. சா. பரீட்சை வரை கல்வி கற்ற பாடசாலையின் பெயர்:—
11. தேர்தல் இடாப்பில் விண்ணப்பதாரரின் பெயர் பதியப்பட்டுள்ளதாயின் அத்தொகுதியின் பெயர்:—
12. ஏனைய தகைமைகள்:—
13. நீதிமன்றத்தில் ஏதாவது குற்றத்திற்காக உமக்குக் குற்றததீர்ப்பு அளிக்கப்பட்டதா? ஆம்/இல்லை
(ஆம் என்றால் விபரங்களைக் குறிப்பிடவும்.)
14. விண்ணப்பதாரியின் உறுதி மொழி
(அ) எனது அறிவிற்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் இந்த விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவையென்று உறுதிப்படுத்துகின்றேன்.
(ஆ) என்னால் வெளிப்படுத்தப்பட்ட விபரங்கள் பொய்யானவையெனக் கண்டு பிடிக்கப்பட்டால் ஆட்சேர்ப்பின் முன்/ ஆட்சேர்ப்பின் பின் நான் தகமையற்றவராக கொள்ளப்பட்டாலும்/ சேவையிலிருந்து நீக்கப்படலாம் என்பதை நான் அறிவேன்.
(இ) இப்பரீட்சையின் பிரமாணங்களுக்கமைய நடக்க நான் இணங்குகிறேன்.
15. கொடுப்பனவு காசுக் கட்டளை அல்லது பற்றுச்சீட்டு இலக்கம் [பற்றுச் சீட்டு அல்லது காசுக் கட்டளையை இணைக்கவும்)

திகதி:- ..................................

விண்ணப்பதாரியின் ஒப்பம்.

விண்ணப்பதாரியின் ஒப்பம் சம்பந்தமான உறுதிமொழி

இவ்விண்ணப்பத்தைஅனுப்பும் ......................என்பவரைத் தனிப்பட்டமுறையில் எனக்குத் தெரியும் என்றும் என் முன்னிலையில் 1991.......... ஆம் திகதி அவர் இதில் ஒப்பமிட்டார் என்றும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

..................................

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
பதவி முத்திரை

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர்:-
பதவி:-
முகவரி:-
திகதி:- (ஏ 1543)


## வரி விளம்பரம்

### தேவை

வேப்பம் விதை, இலுப்பம் விதை தேவை: மிக்வைற், யாழ்ப்பாணம். (ஏ-1531)

ஜாம், சோஸ் போத்தல்கள் (Jam Sauce Bottles) விலை ரூ. 3/-க்கு குறையாமல் கிழமை நாட்களில் காலை 9-00 மணி முதல் மாலை 5-00 மணி வரை பின்வரும் முகவரியில் கொள்வனவு செய்யப்படும். Taste line Industries (PVT) Ltd., No: 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். தட்டாதெருச் சந்தியிலிருந்து அரசடி வீதியால் நல்லூர் நோக்கிச் செல்லும்போது இடதுபக்கம் வரும் முதல் ஒழுங்கை. [சி- 5165]

### தரன் ஸ்ரூடியோ

பாஸ்போர்ட், அடையாள அட்டை - என்லாஜ்மென்ட், கலர்ப்படங்களுக்கும், றபர் சீல்கள், விளம்பர போட்கள், பிளாஸ்ரிக், ஸ்ரிக்கர்கள், டிசைன்கள் ஓவிய வேலைகட்கு தரன் படப்பிடிப்பாளர், 189, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-5065)

### உலோக வேலை

கோவில் மணி வேலைகளும், சிலைகளும், அதற்குரிய இரும்பு வேலைகளும் உரிய நேரத்தில் செய்து கொடுக்கப்படும், விபரங்களுக்கு: 48, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். [சி-5216]

### தவறிவிட்டது

அமிர்தவாசம் மரிய கொறற்றி 10ம் வட்டாரம் புங்குடுதீவு என்பவருடைய அடையாள அட்டையும், ஜொப் காட்டும் சின்னக்கடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நடராசா பூமணி இல. 48, நல்லூர் வீதி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். (சி-5232)

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சகல தரப்பினருக்கும ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும் உங்கள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும் தொடர்பு நேரில் சனி, ஞாயிறு காலை 11-00 - 12-00 மணி S. ஜெயராசா 204, மானிப்பாய் றோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம். [சி.4962]

### (ஆண்டு 5 4)

ஆண்டு 5க்குப் புலமைப் பரிசில்/அனுமதிப் பரீட்சைக் கேற்ப வகுப்புகள் வருடா வருடம் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத்தரும் எமது நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தூர இட மாணவர்களுக்கு சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் பிரத்தியேக வகுப்பு நடைபெறும். ஆண்டு 4 மாணவர்களுக்கும் விஷேட மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பமாயுள்ளன. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [சி-5214]

### போர்க்கால வில்லிசை

[கொழும்புத்துறை]

ஆனையிறவுத்தள முற்றுகைப் போர் பற்றியும். தமிழீழத்தின் இன்றைய தேவை பற்றியும் விளக்கும் "போருக்கு வாருங்கள்" என்னும் வில்லிசை தீவகத்தின் பல பகுதிகளிலும் தற்போது நடைபெற்றுவருகிறது. (154)

# 1989 ஜனவரிக்கு முன்னர் பிரான்ஸ் சென்றவர்கள் அரசியல்தஞ்சம்பெறவாய்ப்பு

(பாரிஸ்)
1989ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் பிரான்ஸுக்கு வந்து அரசியல் அந்தஸ்துகோரியவர்களை திருப்பி அனுப்புவதில்லை என்று பிரான்ஸ் அமைச்சரவை முடிவுசெய்துள்ளது அசிதுடன் புதிதாக அரசியல் அந்தஸ்துக் கோருபவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அகதிகள் அந்தஸ்து வழங்கப்பட்டால் மட்டுமே வேலை செய்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதென்றும் அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

தற்போது வழங்கப்படுவது போல் அகதி அந்தஸ்துகோரி விண்ணப்பித்த விண்ணப்பம் பரிசீலனையில் இருக்கும்போது வேலைசெய்ய அனுமதி வழங்குவதை நிறுத்துவதென்றும் முடிவுசெய்யப்பட்டுளளது. (153)

## இராசி பலன்

31 · 08 · 1991
சனிக்கிழமை
தமிழுக்கு ஆவணி 15

ஷஷ்டி பி ப 12-37 வரை; பரணிபி. ப 3 04வரை, இராகு காலம் காலை 9 05 முதல் 10.35 வரை சுபநேரம் மாலை 3. 05முதல் 4.35 வரை கார்த்திகை விரதம் சித்தயோகம்

மேடம்:- குடும்ப அமைதி. மக்கள் வெகுமதி, காரிய பலிதம்

இடபம்:- இனசனவிரோதம் கண்ணில் ரோகம், மன வெறுப்பு

மிதுனம்:- வித்தைவிருத்தி புத்திரர் பெருமை, குடும்ப சுகம்.

கடகம்:- வெருளித்தனம், தொழில் சிறப்பு, பயணம்.

சிங்கம்:- நண்பர்விரோதம், தொழில்பாதிப்பு, அவமதிப்பு

கன்னி:- தடுமாற்றம் பெற்றோர் வெறுப்பு, அலைச்சல்.

துலாம்:- மனைமாற்றம் தொழில்லாபம், விருந்துபசாரம்.

விருச்சிகம்:- பகைவர் சகாயம், தெய்வதரிசனம் பாராட்டு.

தனுசு:- அதிகாரம், தொழில் தகராறு, மன வேதனை.

மகரம்:- அஞ்ஞானவாசம், கருத்துமோதல், போராட்டம்,

கும்பம்:- சுபகாரியம், சுபச்செய்தி, குடும்பஉல்லாசம்,

மீனம்:- தாய்வழிப்பகை, ஏமாற்றம், குடும்பபிரிவு.

- ஜோஸ்யர்

# மன்னிப்பு கோருகிறோம்

(யாழ்ப்பாணம்)
கடந்த 23-ம் திகதி ஒமந்தைப் பகுதியில், நவரத்தினம் என்னும் பொதுமகன் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரால் தாக்கப்பட்டு இறந்துள்ளார்.

இது சம்பந்தமாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையின் முழுவிபரமும் வருமாறு:

தமிழீழ விடுதலைப் போராட்டம் எமது மக்களது விடுதலையையேநோக்கமாக கொண்டது. எமது மக்களது தாயக மீட்பை, அவர்களது சுபீட்சமான வாழ்வையே இலட்சியமாகக் கொண்டது எமது இயக்கம்.

எமது மக்களது சுதந்திரப் போராட்டத்தின் ஒரு கருவியாகவே எமது மக்களிலிருந்தே இன்று நாம் காணும் விடுதலைப்படை உருவானது. இன்று உருவாகிவரும் தமிழர் தேசிய இராணுவமானது எமது மக்களின் ஒரு அங்கம். அது போராடுவது எம்மக்களின் நலனுக்காகவே இன்று நூற்றுக்கணக்கான போராளிகள் தம் முயிரை விலையாகக் கொடுத்துக் கேட்பது எமது தாயகத்தையும் எமது மக்களது விடிவையுமே.

கடந்த 23-08-1991 அன்று ஒமந்தையில்வைத்து தமிழீழப் பொதுமகன் [திரு. நவரத்தினம் வயது 50] எமது உறுப்பினர் [சுதன்] ஒருவரால் தாக்கப்பட்டு இறந்துள்ளார். இச் சம்பவத்தில் இயக்க ஆதரவாளர்எனச் சொல்லிக்கொள்ளும் ஒருவரும்ஈடுபட்டுள்ளார். சாதாரண 'பிரயாணப் பேருந்தில் இடம் பிடிப்பதில்' ஏற்பட்ட வாக்குவாதமே தாக்குதல் நடவடிக்கைக்கான ஆரம்பமாக அமைந்துள்ளது.

குறிப்பிட்ட குற்றச்செயல் விசாரிக்கப்பட்டு திரு. நவரத்தினம் அவர்களது மரணம் கொலைஎனக்கருதி சுதனுக்கு மரணதண்டனையும், சம்பந்தப்பட்ட ஆதரவாளர் எனப்படுபவருக்கு இரண்டுவருட கடுழியச் சிறைத்தண்டனையும் வழங்கப்படுகிறது.

எந்த ஆக்கிரமிப்பு இராணுவத்திற்குஎதிராக நாம்போராடப் புறப்பட்டோமோ அதே போன்ற அடாவடித்தனமான நடவடிக்கைகளில் எமது உறுப்பினர்கள் ஈடுபட நாம் அனுமதிக்கப் போவதில்லை.

தமிழீழ மக்களின் விடிவுக்காக தம்முயிரைக் கொடுத்த ஆயிரக் கணக்கான போராளிகளுக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் நடந்துகொள்ளும் சுதன் போன்ற ஒரு சிலரது நடவடிக்கைக்காக நாம் வெட்கப்படுகிறோம், வேதனைப்படுகிறோம். எமது மக்கள் அனைவரிடமும் மன்னிப்புக் கேட்கிறோம். குறிப்பாக திரு. நவரத்தினம் அவர்களது குடும்பத்திரின் துயரத்தில் பங்கு கொண்டு மன்னிப்புக் கேட்கிறோம்.

எமது விடுதலை இயக்கத்தை கொச்சைப்படுத்தும் வகையில் எமது அங்கத்தவர்கள் நடந்து கொள்ளும்போது எம் மக்களது நியாயமான கோபத்தை, கண்டிப்பை, விமர்சனத்தை எம்மால் புரிந்துகொள்ளமுடியும். இன்று எமது தாயகத்தில் சீர்குலைந்திருக்கும் சட்ட ஒழுங்கு விடயங்களை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றிருக்கும் எமது இயக்க உறுப்பினர்களே மக்கள் விரோத நடவடிக்கைளில் ஈடுபடுவதை நாம் அனுமதிக்கப்போதில்லை, அனுமதிக்கமாட்டோம் என்பதை எமது மக்களுக்கு உறுதியாகக் கூறுகிறோம். (வி)

## 9 அமைச்சர்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
இதேவேளையில் ஜனாதிபதிக்கு எதிராக நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பொன்று நடைபெறும்போது அதனை ஆதரிக்கப் பெருமளவு ஆளும் ஐ தே. கட்சி எம் பிகள் முன்வந்துள்ளதாக 'இந்திய வானொலி' அறிவித்துள்ளது

ஜனாதிபதிக்கு எதிரான முறைப்பாட்டு மனுவில் கையெழுத்திடாத பல எம். பி.க்களும் தற்போது இந்த மனுவிற்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளார்களாம்.

இதனால் மேலும் ஒரு அரசியல் நெருக்கடி தோன்றிவருவதாகவும் அவ் 'வானொலி' குறிப்பிட்டது. (சி)

## நாடாளுமன்ற

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
தது.

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா தமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் நாடாளுமன்றக் கூட்டத்தை ஒத்திவைத்தல் அதை மீண்டும் கூட்டுதல் சம்பந்தமாக இரு பிரகடனங்களை விடுத்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வு நிறுத்துகை 1991ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30ம் திகதி நள்ளிரவிலிருந்து அமுலுக்கு வருகிறது.

மீண்டும் நாடாளுமன்றம் 1991ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-40க்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

தமக்கு ஏற்பட்டுள்ளஇக்கட்டான சூழ்நிலையைசமாளிக்கும் நோக்கமாகவேஜனாதிபதி பிரேமதாசா பாராளுமன்ற கூட்டத்தை செப்டம்பர்வரை ஒத்திவைத்ததாக தெரியவருகிறது.

நாடாளுமன்றம் மீண்டும் கூடும்போது ஜனாதிபதி பிரேமதாஸா மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுமென தெரியவருகிறது.

## குற்றச்சாட்டு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
வுக்கும் பெரும் அடியாக அமையுமென்றும் குறிப்பிட்டுள்ளது. (சி)

## மண்டைதீவிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
முடியப்பு யோகராணி வயது-18, முடியப்பு பவளம் [வயது 22] ஆகிய இரு சகோதரிகள் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மண்டைதீவுப் பகுதிகளில் இருந்து பெரும்பாலான பொதுமக்கள் இடம்பெயர்ந்து யாழ் நகரிலுள்ள தேவாலயங்களிலும் பாடசாலைகளிலும் தஞ்சம் புகுந்துள்ளனர். இதே நேரம் குருநகர் தொடர்மாடி பகுதியை அண்டி குடியிருந்த பொதுமக்கள் பலரும் இடம்பெயர்ந்துள்ளனர்.

நேற்று அதிகாலை 3மணியளவில் இந்த மூன்று கடற்படை கப்பல்களும் மேற்படி பகுதிக்கு வந்ததினால் அப்பகுதிகளில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள் அனைவரும் அச்சத்தின் நிமித்தம் கரைக்கு வந்துவிட்டதாகவும் கூறப்படுகின்றது. [வி]

## பதவிநீக்க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
அதன் பெரும்பான்மை வலுவை இழந்துவிட்டது

இலங்கையில்ஜனாதிபதிஆட்சி முறையை ஒழித்து நாடாளுமன்ற ஆட்சிமுறையை ஏற்படுத்த தொடர்ந்து பாடுபடுவேன். ஜனாதிபது பிரேமதாசா பதவி இழப்பது உறுதி

ஜனாதிபது பிரேமதாசா ஒரு சர்வாதிகாரி. நாட்டிலும் கட்சியிலும் ஜனநாயகத்தை நிலைநிறுதத நான் போராடுவேன் என்றார்

ஐக்கியதேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை சுதந்திரமாகச் செயற்பட ஜனாதிபதி பிரேமதாசா அனுமதிக்காததாலேயே அவரை பதவியிலிருந்து அகற்ற முடிவு செய்யப்பட்டதாக முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா தெரிவித்தார்.

இந்த பத்திரிகையாளர் மாநாட்டில் திரு லலித் அதுலத்முதலியுடன், திரு. பிறேமச்சந்திராவும். திரு.காமினி திஸநாயக்காவும் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளனர்.

ஜனாதிபதிக்கு எதிராக இவர்கள் பல கருத்துக்களை இங்கு தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுறது.

அரி-கோப் உள்ளூர் உணவகம்

## கோலாகலத் திறப்புவிழா

காலம்: 01-09-1991 ஞாயிறு நண்பகல் 12·00 மணி

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (ப. பொ)

உயர்திரு தி. சபாரட்ணம் அவர்களால்

கோலாகலமாகத் திறந்து வைக்கப்படும்.

★ எமது சேவையில் மேலும் ஓர் முன் முயற்சி!

★ அரியாலை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவு சங்கம், ஜோ எகட்டனின் அனுசரணையுடனான சேவையில் உள்ளூர் மூலவளங்களைக் கொண்ட

## உள்ளூர் உணவு விநியோகசாலை

★ அறு சுவை உணவு வகைகளுடன், சிற்றுண்டி உணவு வகைகளும் அடங்கிய 24 மணிநேர (இரவு, பகல் சேவை.)

★ விசேடமாக வார இறுதி நாட்களில் ஒடியல் சேர்க்கையுடனான மாமிச, மரக்கறிக் கூழ்

★ விசேட, வைபவ தேவைகளுக்கான முன்கூட்டிய பலரக உணவுத் தேவைகளுக்கான பதிவுகளும் ஏற்கப்படும்.

அன்பர்கள், ஆதரவாளர்கள், சக கூட்டுறவுச் சங்கங்கள, திணைக்களங்களின் ஆதரவினை நாடி நிற்கின்றோம்.

நிர்வாகிகள்

அரியாலை தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம்

"அரிகோப் உள்ளூர் உணவகம்"

19/3, கொழும்புத்துறை சாலை, சுண்டுக்குளி

(சி 5234)

## தவறுதல்

மாகாண பொதுச் சேவை ஆணைக் குழு வடக்கு--கிழக்கு மாகாண சபை பதவி வெற்றிடம் சம்பந்தமாக 28-08-1991ம் திகதி 2ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட வெற்றிடமாகவுள்ள கிராம அலுவலர் பிரிவுகளில் 13, பருத்தித்துறை - 97, ஜே/406 கற்கோவளம். தவறுதலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

ஒப்பம்: கா. மாணிக்கவாசகர்,
யாழ். அரசாங்க அதிபரும்,
மாவட்ட ஆணையரும்.

செயலகம்,
யாழ்ப்பாணம்.
29-08-91.

[ஏ 1546]

## "A" LEVEL CENTRE

## உயர்தராதர கல்வி நிலையம்

பருத்தித்துறை வீதி, 1-ம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

92 பௌதிகவியல்
புலம்

ஆரம்பம்: 01 - 09 - 91

Sun. - 11-15 - 12 - 15
Sat. & Sun. 11-15 - 12 - 15

ஆசிரியர்: Mr. சௌந்தி (Bsc. Hons)

(ஏ-1541)

# நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையில் புலிகளையும் அரசையும் ஈடுபடுத்த

## சுவிஸ் அரசு முயற்சி!

[ஜெனிவா]
இலங்கை இனப்பிரச்னை தீர்வுக்கு நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை ஒன்றில் புலிகளையும் அரசையும் சந்திக்க வைக்க சுவிற்சர்லாந்து அரசு முயன்றுவருகிறது. இதன் ஒரு கட்டமாக சுவிஸ் அரசு அதிகாரி ஒருவர் இம்மாத முற்பகுதியில் இலங்கை வந்து திரும்பியுள்ளார்

நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை ஒன்றை இரு தரப்பினரிடையேயும் ஏற்படுத்த இவர் அரசு தரப்பினரையும் புலிகளின் பிரதிநிதிகளையும் கொழும்பில் சந்தித்து பேச்சுக்கள் நடாத்தியுள்ளார்.

இனப்பிரச்னை தீர்விற்காக இவ்விரு தரப்பினரிடையேயும் பேச்சுக்கள் நடக்க தமது நாடு ஆர்வம் கொண்டுள்ளதாகவும் அவர் இவர்களுக்கு கூறியுள்ளார். [சி]

## எம். பிக்களுக்கு விலைபேசப்படுகிற...

(கொழும்பு)
ஜனாதிபதிக்கு எதிரான... வில கையெழுத்திட்ட... ஐ. தே. க. எம். பிக்கள்... பேச ஆரம்பித்து விட்ட... பி. பி. ஸி தெரிவித்தது.

நாடாளுமன்ற கூட்... தொடரை ஒத்திவைத்... மூலம் ஜனாதிபதி தரகு... ஆரம்பித்துள்ளதாகவும்... செய்தி மேலும் தெரிவித்த...

மனுவில் கையெழு... வர்கள் உயர்ந்த... கள் பற்றி பேசினாலும்... பேரத்திற்கு தயா... களே என்றும் பேர... மாகிவிட்டதாகவும் பி... தெரிவித்தது.

## பலத்த பாதுகாப்பு ஏற்பாடு சென்னையில் புலிகள் ஊடுருவல்

[சென்னை]
சென்னை நகரில் விடுதலைப் புலிகள் ஊடுருவியுள்ளார்கள் என்று கிடைத்த தகவலை அடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகப் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக சென்னை நகர காவல்துறை ஆணையர் திரு. ஆர். இராஜகோபாலன் தெரிவித்தார்.

அரசு தலைமைச் செயலகம், காவல்துறை ஆணையர் செயலகம், மற்றும் பலமுக்கிய பிரமுகர்கள் வசிக்கும் பலவிடங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்காக 70 சப்-இன்ஸ்பெக்டர்கள் ஹரியானாவில் உள்ள தேசிய பாதுகாப்புக் காவல் பயிற்சிப் பள்ளியில் சிறப்புப் பயிற்சி பெற்று வந்துள்ளதாக திரு ராஜகோபாலன் தெரிவித்துள்ளார்.

## புலிகளின் தாக்குதலில் ராணுவம் பின்வாங்கியது

[யாழ்ப்பாணம்]
ஆனையிறவு இராணுவமுகாமிலிருந்து நேற்று இராணுவத்தினர் வெளியேறிய போது விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டதில் இராணுவத்தினர் பின்வாங்கி மீண்டும முகாமுக்குள் சென்றுவிட்டனர்.

நேற்றுமுன்தினம் இரவு 8மணியளவில் இராணுவத்தினர் முகாமிலிருந்து வெளியேறி விடுதலைப் புலிகளின் காவல் அரண்களை நோக்கி வந்த போது விடுதலைப் புலிகள் அவர்கள் மீது கடும் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினர் தமக்கு ஏற்பட்ட சேதங்களுடன்மீண்டும் முகாமுக்குள் சென்றுவிட்டதாக கூறப்படுகிறது. (வி)

## வீர வணக்கம்

[யாழ்ப்பாணம்]
மணலாறுப்பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற விபதி தொன்றில் அஜந்தன் [மதியாபரணம் தவகாந்தன் - அரியாலை] மரணமானார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். [வி]

★

[வவுனியா]
வவுனியா மாவட்டத்திலுள்ள பூவரசம்குளம் என்னுமிடத்தில இராணுவத்துக்கும விடுதலைப்புலிகளுக்குமிடையில் நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் நடைபெற்ற கடும்மோதலில் புளியங்குளத்தைச்சேர்ந்த லெப். குமார் பாவற்குளத்தை சேர்ந்த வீர வேங்கை சுசி ஆகியோர் வீர மரணமடைந்தனர். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர். (வி)

## சவர்க்காரம், மண்ணெண்ணெ... கூடுதலாக எடுத்துவரலா...

(கொழும்பு)
பாதுகாப்பு அமைச்சினால் வடபகுதிக்கு எடுத்துச் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்ட பொருட்களில் சிலவற்றை மீண்டும் எடுத்துச் செல்வதற்கு விரைவில் அனுமதி வழங்கப்படவுள்ளது

இதன் பிரகாரம் தடைசெய்யப்பட்டமருந்துவகைப் பட்டியலிலுள்ள பனடோல்... பிரின் போன்றவற்றை... மதியின்றி எடுத்துச்... லாமென்றும், அதேவே... பகுதிக்குச் செல்லும்... 6 கட்டி சன்லைற் 6 கட்டி... சோப்புகள் 5 லீட்ட... ணெண்ணெ என்பனவற்ற... அனுமதியின்றி எடுத்துச்செ... லலாமென்றும் கூறப்படுகிறது. (வி)

## மீனவர் கடலில் தள்ளப்பட்டனர்

(பண்டத்தரிப்பு)
மாதகல் கடல்பகுதியில் கட்டுமரத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இரு மீனவர்களைத் தாக்கித் தமது கடற்படைக் கப்பலில் ஏற்றிய கடற்படையினர் அவர்களை புங்குடுதீவுக்குச் சமீபமாகவுள்ள கடலில் தள்ளிவிட்டுச் சென்றனராம்.

கடந்த புதன்கிழமையன்று இரவு ஏழுமணியளவில் மாதகல கடலில் மாதகல் மத்தியை சேர்ந்த சூசையப்பு அருமைநாயகம் என்ற 24வயதுடைய இளைஞரும் சுழிபுரத்தைச் சேர்ந்த மற்றொரு இளைஞரும் சேர்ந்து கட்டுமரத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்தவேளையில் அப்பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படைக் கப்பலில் வந்த கடற்படையினர் இருவரையும் கைது செய்து மறுநாள் காலையில் புங்குடுதீவுக் கடல் பகுதியில் கடலில் தள்ளிவிட்டுச் சென்றனர் என்றும் கூறப்படுகின்றது

இவர்களிருவரும் சற்றுத் தூரம் கடலில் நீந்தி வந்து கரை சேர்ந்துவிட்டதாகவும் கூறப்படுகின்றது. [72]

### பிரேரணையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)
திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஜனாதிபதி பிரேமதாசாவைப் பதவி நீக்கம் செய்யக்கோரும் பிரேரணையில் தவறுதலாகக் கையொப்பமிட்ட ஐ. தே. கட்சியின் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது பெயர்களை மேற்படி பிரேரணையிலிருந்து நீக்கக்கோரி பாராளுமன்ற சபாநாயகருக்கு மனு ஒன்றைச் சமர்ப்பித்திருப்பதாக அரசு சார்பான ஆங்கில இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது

பாராளுமன்றத்தைக் கலைக்கக் கோரும் மனுவென தாம் தவறாக நினைத்தே கையொப்பமிட்டதாக அவர்கள் தெரிவித்துள்ளதாகவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கேகாலை மாவட்ட உறுப்பினர் தர்மசிறிக ஜயசிங்க மாத்தளை மாவட்ட உறுப்பினர் ஜி. பி ஜினதாஸ், கேகாலை மாவட்ட உறுப்பினர் வின்சன்ட் ஜயரத்ன ஆகியோரே தமது பெயர்களை மேற்படி பிரேரணையிலிருந்து நீக்கக் கோரிய உறுப்பினர்களாவர். (க)

### சுதந்திரத்தின்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
இலங்கையில் ஜனாதிப... ஆட்சி முடிவுக்கு வந்துவிட்டதாவென பி பி ஸி. நிருபர் கேட்டபோதே அவர் மே... கண்டவாறு பதிலளித்தார்...

அவர் தமது பேட்டியில் மேலும் கூறியதாவது:

இலங்கையில் ஜனாதிபதி ஆட்சி முடிவுக்கு வந்துவிட்ட... என்று கூறுவதைவிட நா... கஷ்டப்பட்டு பெற்ற சுதந்திரத்தின் பலாபலன்கள் ஜனாதிபதி ஆட்சிமுறையின் கீழ் எமக்கு கிடைக்காமல் போய் விடுகிறதென்றே கூறலாம்.

நாடாளுமன்றத்தை ஒத்தி வைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு அரசியலமைப்பு ரீதியாக வழங்கப்பட்டுள்ள ஒரு அதிகாரமாகும் என்று தெரிவித்தார்.

நவசமசமாஜக் கட்சியை சேர்ந்த திரு. வாசுதேவநாணயக்கார பி.பி.ஸி.க்கு கருத்து தெரிவிக்கையில்: ஜனாதிபதி பிரேமதாசா அரசியலமைப்பை மீறிநடந்திருப்பதாக தெரிவித்தார்.

## இன்று நல்லை ஆதீன வெள்ளிவிழா

[யாழ்ப்பாணம்]
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் இன்று சனிக்கிழமை இருபத்தைந்தாவது நிறைவு விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாடவுள்ளது.

ஆதீனத்தின்பீடாரோஹண விழாவில் இன்று காலை 9 மணிக்கு விசேட பீடா அபிஷேகமும் 11 மணிக்கு கொலுப் பூசையும் இடம்பெறும். இதனைத் தொடர்ந்து ஆதீனத்தின் சமயப்பணிகள்குறித்த வாழ்த்துரைகளும் சமயச் சொற்பொழிவும் இடம்பெறும்.

பி. ப. 3 மணிக்கு திருமுறை முற்றோதல் ஆரம்பமாகும் இதன்பின் பண்ணிசையும், கதாப்பிரசங்கமும் இடம் பெறும்.

### கிட்டு

(1ம் பக்கத் தொடர்ச்சி)
பிரதேசமான யாழ்ப்பாணம் செல்லக்கூடுமென லண்டனில் உள்ள விடுதலைப்புலிகள் பேச்சாளர் திரு அன்ரன் ராஜா தெரிவித்ததாக பி. பி ஸி. நேற்று அறிவித்தது (க)

### பெருமளவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)
ஜனநாயக விரோத ஆட்சியை தடுக்கவுமே ஜனாதிபதியை பதவி விலக்க கோரியுள்ளோம் என்றனர்.

இந்த முயற்சி வெற்றியளிக்கும் என்றும் அவர்கள் உறுதி கூறியுள்ளனர். [சி]

### பிரேமதாஸா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
தது.

தற்போதைய நிலைகுறித்து அவரை பேட்டிகாண முயன்ற பி.பி.ஸி. நிருபருக்கு இவ்வாறு தெரிவிக்கப்பட்டதுடன் கருத்தெதனையும் கூற ஜனாதிபதி செயலகம் மறுத்துவிட்டதாம்.

இதேவேளை இதுபற்றி கருத்துக்கூற பிரதமர் திரு விஜயதுங்காவும், அமைச்சரவைப் பேச்சாளர் திரு. ரணில் விக்கிரமசிங்கவும்மறுத்துவிட்டதாகவும் பி.பி.ஸி. தெரிவித்தது.


நிதர்சனம் நிறுவனத்தில்
பின்வரும் வெற்றிடங்களுக்கான
**விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

1. தகவல் சேகரிப்பாளர்கள்
2. தகவல் அலுவலர்கள்
3. செய்தியாளர்கள்
4. நிகழ்ச்சி மதிப்பீட்டாளர்கள்
5. அறிவிப்பாளர்கள்
6. விளம்பரம் சேகரிப்பாளர்கள்

அனுபவம், திறமை என்பவற்றிற்கேற்ட் தகுந்த வேதனம் வழங்கப்படும்.

சுய விபரங்களுடன் 1991 - 09 - 05 இற்கு முன் தொடர்புகொள்க.

"நிதர்சனம்"
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
குறிப்பு: மேலதிக விபரங்களை நிதர்சனம் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
(ஏ 1537)


## மரண அறிவித்தல்

### பொன்னையா தன்மாவரதர்

[இளைப்பாறிய அநுராதபுரம் புகையிரத கட்டுப்பாட்டு நிலைய பிரதம கட்டுப்பாட்டு அதிகாரி...]

கைதடி வடக்கைச் சேர்ந்த தன்மாவரத... 27-08-1991 அன்று காலமானார் இவர் காலஞ்... சென்ற திரு., திருமதி பொன்னையா தம்பதிகளின்... புதல்வரும் காலஞ்சென்ற திரு., திருமதி சுப்பிரமணியம்... தம்பதிகளின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கண... வரும், பாலச்சந்திரன் [கணக்காளர், லங்கெ... லிமிட்டெட்], பாலகுமாரன் (கணக்காளர், துரை... ராஜா அசோசியற் பிறைவேற் லிமிட்டெட்), பால... தயாளன் (தொழில் நுட்பவியலாளர், ரூபவாஹினி... கூட்டுத்தாபனம்) பாலராஜன் (அமெரிக்கா), சீலா... லக்ஷ்சுமி, பாலேந்திரன் [சுவிஸ்] ஆகியோரின் அன்புத்... தகப்பனும், சகுந்தலாதேவி, சுலோஜனா ஆகியோ... ரின் மாமனாரும், சுதர்சன், ஜெனனி ஆகியோரின்... அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியை சனி... 31-08-1991 இன்று சனிக்கிழமை மாலை 2 மணியள... வில் கைதடி வடக்கிலுள்ள ஊத்தல் மயானத்தில்... நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்... பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. பாலகுமாரன்
(மகன்)

"சீதாபதி,"
கைதடி வடக்கு, கைதடி.
(சி-5235)


இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஆகஸ்ட் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Regestered as a News Paper at the General Postoffice Sri Lanka under Licence Number B/10336/81,